41 காலணு Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 4-5-33

சவாரி செய்தவனுக்கு கல்தா!



—*Courtesy of "Hindustan Times"*

இந்திய-ஜப்பான் வர்த்தக ஒப்பந்தம் 1905ஆம் வருஷத்தில் ஏற்பட்டது. 1932ல் இந்தியா, லங்காஷயர் இருவர் முதுகிலும் ஜப்பான் ஏறிச் சவாரி செய்தது. ஆகவே 1933ல் அந்த ஒப்பந்தத்தை எட்டி உதைத்து விட்டனர். ஏழை இந்தியன் முதுகிலேற என்ன போட்டியப்பா?

மீண்டும் மகா தியாகம்!

மீண்டும் சோதனை வந்து விட்டது! இருள் நிறைந்த நம் நாட்டுக்கு ஒளி தந்து கொண்டிருக்கும் அந்தத் தீபம் அணையுமோ? மூட நம்பிக்கை, அடிமைத்தனம், அகம்பாவம் முதலியவைகளில் ஊறிப்போன புழுதிகள் போன்ற நம்மவர் மத்தியில் ஓர் மாணிக்கம் தோன்றிற்று. அம் மாணிக்கம் மறையுமோ? பாரத நாட்டுக்கு மீண்டும் இது சோதனைக் காலம்! தேவி கஸ்தூரிபாயின் மாங்கல்யத்துக்கு சோதனைக் காலம்! பாரத மக்களின் அன்புணர்ச்சிக்கு சோதனைக் காலம்! பாரத நாட்டுக்கு மட்டுமல்ல, இந்த உலகத்திற்கே சோதனைக் காலம் வந்திருக்கிறது. ஒரு மகா புருஷனை உலகம் இழக்கப் போகின்றதா, இல்லையா வென்ற சந்தேகம் தோன்றியுளது. மானிடச் சிப்பிக்குள்ளே ஓர் முத்தைப் போலத் தோன்றியுள்ள மகாத்மா காந்தி "மூன்று வாரம் உண்ணுத் தவம் கிடப்பேன்" என்று வீறு கூறியது கேட்டு உலகம் திடுக்கிட்டிருக்கின்றது. இந்தச் சோதனை எவ்வாறு முடியுமோ?

மனித ஜன்மத்தோடு பிறந்தது பசி! பத்தையும் பறக்க அடிப்பது பசி! ஒரு நாள் உணவை ஒழிக்க இயலாதது வயிறு. அந்த வயிறைக் காயப் போடுவ தென்பது ஆன்ம வீரம் பெற்றவர்களாலும் யோகிகளாலுமே செய்யக் கூடிய காரியம். ஆனால் பசிக்கும் பூத உடலுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. அடுத்த எட்டாந் தேதியினின்று எரவாடாச் சிறையிலுள்ள சபர்மதி முனிவரின் உடல் என்ன பாடுபடுமோ? உபவாஸ விரதம் என்றது லேசானதா? திவலை திவலையாக நாடிகள் குறையுமே! துளித் துளியாக உணர்ச்சி குன்றுமே! அணு அணுவாக அங்கம் சுருங்குமே! இப்பேர்ப்பட்ட கடுமையான தவத்தை அண்ணல் ஏற்றதற்கு யார் பொறுப்பாளி? நிதம் தேடிச் சோறு தின்று வெறும் பேச்சுகளைப் பேசி, கருமத்தில் கண்ணுபிராது காலங் கடத்தும் நாம் தான் பொறுப்பாளிகளென்று தோன்றுகிறது.

வயதோ அறுபத்து நான்குக்கு மேலாகி விட்டது. இந்த வயதில் அடிகளின் பூத உடல் இந்த மகாத் தியாகத்தைத் தாங்குமா? நாம் போன மாதத்தில் நேரில் அம் மகா புருஷனைத் தரிசிக்கும் பாக்யம் பெற்றோம். ஒரு வாரத்துப் பட்டினியைக் கூட அந்த இளைத்த உடலத்தால் தாங்க முடியாது. ஆனால் அண்ணலின் ஆத்ம சக்தி யிடத்தில் நமக்கு பூரண நம்பிக்கையுண்டு. அந்த ஆத்ம சக்தி தான் அவரைக் காக்க வேண்டும். பாரத மக்களின் குல தெய்வங்கள் அவருக்கு ஆசி வழங்க வேண்டும். இந்தச் சோதனையில் வெற்றி ஏற்பட வேண்டும்.

பாரத நாடு ஓர் தியாக பூமி! அந்த அந்தத் தலை முறைகளுக்கு அறிவூட்டத் தவசிகள் தோன்றிய புண்ணிய பூமி இதுவே! இந்தத் தலை முறையில் ஹிந்து மதத்தைக் கவிந்துள்ள பாசிகள் மறையும் வண்ணம் ஆண்டவன் தனது தூதனை அனுப்பி யிருக்கின்றான். அந்தத் தூதன் தனது உபதேசங்களை வாரி வாரி யிறைத்து வருகின்றான். செவியுற்ற பக்தர்கள் பலர் பணி செய்வதில் வேகம் கொள்கிறார்களில்லை. மூட நம்பிக்கையும், அகம்பாவமுமோ தாண்டவ மாடுவது நின்றபாடில்லை. ஹரிஜனப் பணியோ காந்திஜி எதிர்பார்த்த அளவுக்கு முன்னேறவில்லை. ஆகவே அந்தத் தேவ தூதன் நமக்கு அறிவுறுத்த விரும்புகின்றான். எரவாடா சிறைக்குள் அடைந்து கிடக்கும் ஓர் கைதி எவ்வாறு நமக்கு அறிவுறுத்துவது? எவ்வாறு தியாக ஒளியை நாட்டுக்குப் பரப்புவது? எவ்வாறு தொண்டர் கூட்டத்தை உண்டாக்குவது? உண்ணுத் தவம் என்ற ஓர் கருவி தான் அக்கைதியின் கையில் இருக்கின்றது. ஆகவே அக்கருவியை மீண்டும் அந்தத் தேவ தூதன் பிரயோகிக்க விரும்புகின்றான்.

காந்திஜி இன்று ஏற்றுள்ள விரதத்தைக் கண்டு அவரைப் பித்தரென்று சிலர் சொல்லக் கூடும். ஆனால் ஜீவச் சவங்களைப் போலுள்ள நம் ஜாதிக்கு உணர்ச்சி யூட்ட அந்தப் 'பித்தனு'ல் தான் முடிகின்றது.

'உடல்' என்ற சிறையை விட்டு விலகிவிட வேண்டுமென அந்த உன்னத ஆத்மா விழையவில்லை. "நான் ஜீவித்திருக்கவே விரும்புகின்றேன்" என்று காந்திஜி கையடித்துத் தந்திருக்கின்றார். ஆகவே இது பித்தமல்ல! நமக்கு உணர்ச்சி ஊட்டுவதற்கே இந்த சாகஸ கிருத்தியம்! ஆதலால் பாரத மக்களே! தர்க்கம் செய்தது போதும்! பேச்சை நிறுத்தி ஹரிஜனப் பணியில் இறங்குவோம். அண்ணலுக்கு ஆன்ம உணவை அனுப்புவோம்! ஹே! தலைவர்களே! ஸனாதனிகளே! எரவாடாவுக்குச் சென்று அய்யனின் உயிரைக் காக்க முற்படுங்கள். ஹே குல தெய்வங்களே! எங்கள் தலைவன் உயிரைப் பிச்சைக் கேட்கின்றோம்! வரம் தாருங்கள்!

வாழ்க காந்திஜி!

'மீண்டும் மூன்று வாரம் உண்ணு விரதம் இருப்பேன்'

(தேச மக்களுக்கு மகாத்மா விடுத்துள்ள சபத அறிக்கை)

சில நாட்களாக என் மனத்தில் கடும் போராட்டம் நடந்து வந்தது. சென்ற ஹரிஜன தினத்தின் முதனாளன்று எனது அந்தராத்மா என்னை நோக்கி, "ஏன் அதைச் செய்யாமலிருக்கின்றனை?" என்று கேட்டது. அந்தக் குரலை எதிர்த்தும் பயனில்லை. எனவே மே மாதம் 8-ம் தேதி நடுப்பகலினின்று 29ம் தேதி திங்கள் வரை 21 நாள் உண்ணு விரதம் இருப்பதெனத் தீர்மானித்தேன். இவ்விரதத்திற்கு ஏதும் நிபந்தனை யில்லை! அதை ரத்து செய்வதற்கு மில்லை.

இவ்விரதத்தை நான் ஏற்றதற்கு காரணம் என்ன? வாயினல் விவரிக்க முடியாத அநேக புனிதமான காரணங்கள் உண்டு. யாவும் ஹரிஜன இயக்க சம்பந்த மானவைகளே! குறிப்பாக எவரையும் முன்னிட்டு இவ்விரதத்தை ஏற்றேனில்லை. முக்கியமாக என்னை முன்னிட்டுத்தான் இந்த விரதம் ஆரம்பிக்கப்பட்டுளது. எனது ஆத்மாவைச் சுத்தம் செய்து கொள்வதற்கும், எனது சகாக்களைக் கவனமாகவும், எச்சரிக்கையோடும் உழைக்கத் தூண்டுவதற்குமே இவ்விரதம் ஏற்பட்டுளது. ஆனல் என்னேடு எவரும் உண்ணு விரதத்தைத் தொடங்க வேண்டாம். அவ்வாறு தொடங்குவதால் தங்களுக்குச் சங்கட முண்டாக்கிக் கொள்வதோடு என்னையும் புண்படுத்தினவர்களாவர். நிற்க,

சென்ற செப்டம்பர் மாதத்தினின்று ஹரிஜன இயக்கத்தைப் பற்றிப் பரிசிலனை செய்து வருகிறேன். நான் இதற்கு முன் எண்ணியிருந்த அளவை விட அதிகமாக இந்தக் கேடு (தீண்டாமை) நாட்டிலிருப்பதைக் கண்டு பிடித்தேன். கேவலம் பணத்தால் இந்தக் கேட்டைப் போக்கி விட முடியாது. ஹரிஜனங்களுக்கு செல்வம், கட்டுப்பாடான ஸ்தாபன அமைப்பு, அரசியல் அதிகாரம் முதலியன அத்யாவசிய மானவைகளே. ஆயினும் அவைகளைத் தந்து விடுவதால் மட்டும் இந்தத் தீங்கைப் போக்க முடியுமா வென்றல் இயலாது. உபவாசத்தினலும், பிரார்த்தனையினலுமே அதைச் சாதிக்க முடியும். பகவான் சத்திய ஸ்வரூபி! வலிமைச் செருக்குடன் அவரை அணுக இயலாது. பணிவோடிருந்தால் தான் அவரை அணுக முடியும். ஆனல் ஆத்ம உறுதியின்றி கேவலம் உடலை மட்டும் பட்டினி போடுவதால் பயனில்லை. உண்மை தேடி உழைப்பவன், எதிரிகளையும் தனது அன்புக் கண்ணல் நோக்குபவன், மிருக இச்சை, இகத்தின் செல்வம், புகழ் முதலியவைகளைத் துறந்தவன், இவர்கள்தான் உண்ணு விரத மேற்க யோக்கியதை யுடைய வர்கள். ஆகவே எவரும் திடுதிடென்று உண்ணு விரதத்தில் இறங்கி விட வேண்டாம்.

இறக்க வேண்டு மென்ற ஆசை எனக்குத் துளியும் கிடையாது. எனது லக்ஷியத்திற்காக மேலும் மேலும் உழைக்க நான் உலகில் இருக்கவே விரும்புகிறேன். எனது சகாக்களின் உழைப்பில் இன்னமும் பரிசுத்தமும், ஊக்கமும் ஏற்பட வேண்டும். ஏனெனில் இதுவரையில் நமது தோழர்களிடம் எவ்வளவோ அழுக்காறு களிருப்பதை நான் கவனித்திருக்கிறேன். அவர்களுக்கும் இந்த உபவாசம் ஓர் எச்சரிக்கை யாகும்.

ஹரிஜன இயக்கத்தை ஓர் அரசியல் சூழ்ச்சியென்று எனது சனதன நண்பர்கள் எண்ணுகின்றதை மறந்து, இது மத சம்பந்தமானது என்பதை அறிந்து கொள்ள வேண்டு மென்பதும் இந்த உபவாசத்தின் நோக்கம்.

இவ்வுடலிலிருந்து மேலும் ஊழியம் பெற வேண்டு மென்பது பகவானின் திருவுள்ளமாயின் அவர் இவ்வுடலைக் காத்துக் கொள்வார். ஆன்மார்த்த உணவளித்துக் காப்பார். ஜாதி ஹிந்துக்கள் ஹரிஜனங்களுக்குச் செய்து கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைப்பார்களானல் எனக்கு ஆன்மார்த்த உணவு அனுப்பியவர்களாவர்.

இவ்விரதத்தை நான் இனிது முடிக்குமாறும், நான் இருப்பினும், இறப்பினும் லக்ஷியம் ஈடேறுமாறும், எனக்காக என்னுடன் பிரார்த்திக்குமாறு இந்தியாவிலும், உலக முழுவதிலு முள்ளவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். விரதத்தின் முடிவு யாதாயினும் என்னை மூடியுள்ள மாயை அகல வேண்டுமென சனதன நண்பர்களும் ஆண்டவனிடம் பிரார்த்திப்பார்களாக!

"வண்ணான் வந்தானே!"

எப்பொழுதும் உப்பு மூட்டையையே சுமந்து சென்ற ஒரு கழுதை, ஒரு நாள் தண்ணீரில் விழுந்து விட்டது. உப்புக் கரைந்தது. சரக்கு லேசாயிற்று. மூட்டையைக் கரைக்க இது நல்ல தந்திர மென்று அறிந்த கழுதை பிறகு இரண்டு மூன்று நாள் தொடர்ந்து இவ்வாறே செய்தது. எஜமான் பார்த்தான். ஒரு பஞ்சு மூட்டையை ஒரு நாள் அதன் மேல் வைத்தான். கழுதை வழக்கம் போலத் தண்ணீரில் விழுந்தது. பஞ்சு நனைந்து ஒன்றுக்குப் பல மடங்காய் கனக்க ஆரம்பித்தது. பிரிட்டிஷ் அரசாங்கக் கொள்கையைத் தாங்கும் பால்டுவின், சமீபத்தில் செய்திருக்கும் ஒரு பிரசங்கத்தைக் கேட்க இந்தக் கழுதைக் கதை நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது.

பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியச் சீர்திருத்த சம்பந்தமாகச் செய்யும் வேலையை அவர் "கழுதை வேலை" என்ற திருநாமத்தால் அழைக்கிறார். மிகவும் பொருத்தமான பெயர். கழுதைக்கு கற்பனா சக்தி கிடையாது. தூக்கி வைக்கும் மூட்டையைச் சுமப்பதே அதன் வேலை. இப்பொழுது கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியின் முதுகில் வைக்கப் பட்டிருப்பது உப்பு மூட்டை யென்று அது நினைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், அது பஞ்சு மூட்டையானாலோ வெகு தமஷா யிருக்கும்!

'பார்லிமெண்டு' என்ற "வண்ணான்" கூடிய சீக்கிரம் வந்து சர்க்கார் சுமையைக் குறைத்து விடுவான் என்று பால்டுவின் தைரியம் கூறிக் கொண்டிருக்கிறார். சர்ச்சில் கோஷ்டி பார்லிமெண்டுக்கு இந்திய மசோதா வரும்போது "வண்ணான் வந்தானே" என்று பாடிக்கொண்டு முன்னே வரலாம்.

ஆனால், நடக்கப் போவது என்ன? இந்தியப் பொதுஜன அபிப்பிராயம் என்ற ஆறு ஒன்றைக் கடந்தாக வேண்டும் என்பது பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தெரியுமோ? அதைக் கடக்கும் பொழுது, முதுகிலிருக்கும் மூட்டை கரையாமல், சுமையைப் பல மடங்கு அதிகரித்து விடும் சக்தி அந்த ஆற்றுக்கு உண்டு. அப்பொழுது பார்லிமெண்டாகிய வண்ணான் வந்தாலும் பயனில்லை, சர்ச்சில் கோஷ்டியாகிய வண்ணாத்தி வந்தாலும் பயனில்லை; கழுதையும் சுமையும் ஆற்றோடு போகவே நேரிடும் என்பதை அவர்கள் இப்பொழுது அறிந்து கொள்ளப் போவதாகத் தோன்றவில்லை.

ஒரு ராஜாவின் 'ஷிகாரி'

பண்டைக்கால இந்தியாவில் வனங்களுக்கருகிலுள்ள பிரஜைகள் ராஜாவிடம் சென்று முறையிடுவார்கள். துஷ்ட ஜந்துக்கள் தங்களைத் தொந்தரவு செய்வதைப் புகார் செய்வார்கள். ராஜா வேட்டைக்குப் புறப்படுவார். ஜனங்களை சம்ரக்ஷிப்பதன் நிமித்தமே மிருக வேட்டைகள் நடந்த காலம் மாறிவிட்டது. இப்போது இந்தியாவிலுள்ள ராஜாக்களும் வேட்டை யாடுவதில் குறைச்சலில்லை. பெண் வேட்டை யாடிய நேரம் முடிந்த பின்பு மிருக வேட்டையைத் தேடி ஓடுபவர்களுண்டு. பொது ஜனங்களிட மிருந்து கசக்கிப் பிழிந்து வாங்கிய வரிப் பணத்தைச் செலவழிக்க வழி தெரியாமல் ஏராளமான காசைச் செலவிடுவதற்கு 'ஷிகாரி' புறப்படுவதை அரசர்கள் ஓர் ஷோக்காகக் கொண்டிருக்கின்றனர்.

ஜோட்பூர் அரசர் இப்போது கிழக்கு ஆப்பிரிக்காவுக்குப் போய் மிருக வேட்டை யாடப் போகின்றாராம். இந்தியாவிலேயே மிருக வேட்டை நடத்தினால் அதிகக் காசு செலவழியாதே என்ன செய்வது? காசு நன்றாய்க் கரைய வேண்டுமானால் வேற்று நாட்டு வேட்டைதான் நல்ல வழி யென்று ஜோட்பூர் ராஜாவுக்குப் பட்டது. ஆப்பிரிக்காவில் கவர்னராயிருந்த ஓர் வெள்ளைக்காரர் இந்த மகாராஜாவின் வேட்டைக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கின்றாராம். சூடான வேட்டைக்கு முன் ஜிலுஜிலுப்பாக வாழ வேண்டாமா? அதற்காக மகாராஜா உதகமண்டலத்தில் சில நாள் தங்கியிருப்பாராம். பிறகு பம்பாய் சென்று தமது பெருங் கூட்டத்தோடு கப்பலேறுவாராம்.

இந்த 'ஷிகாரி' இல்லை யென்று யார் முறையிட்டார்கள்? அப்படியே வேட்டைக்குச் சென்றாலும் அங்கு யாரோ ஒரு சாதாரண வேட்டைக்காரன் ஒரு சிங்கத்தையோ புலியையோ அடித்துப் போட்டால் 'ராஜாவின் வேட்டையில் கிடைத்தது' என்று அதற்கு லேபில் ஒட்டி விடுவார்கள். இந்த ஜோட்பூர் மகாராஜா தம்மோடு போட்டோ காமிராக்களையும் கொண்டு போகப் போகிறாராம். செத்த சிங்கத்தோடு தம்மைப் படம் எடுத்துக்கொள்ள வேண்டு மென்பது ராஜாவின் ஆசையானால் அதற்கு ஆப்பிரிக்கா போக வேண்டுமோ? பொது ஜனங்களின் பணத்தை விரயம் செய்ய வேண்டுமோ? இப்படியுள்ள இந்திய ராஜாக்களை பிரஜைகள் எப்படி நேசிப்பார்கள்?

தலா 10 ரூபா—அந்நியச் சாமான்

(சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியர்)

சென்னை மாகாணத்தில் 1931-32ல் நடந்துள்ள அந்நியச் சாமான் வியாபாரம் 42 கோடி ரூபாய் பொறுமான முடையதென்று தெரிகிறது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளோடு 23 கோடிக்கும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளோடு 15 கோடிக்கும் ஆசிய நாடுகளோடு 4 கோடிக்கும் வியாபாரம் செய்திருக்கிறோம்.

நமது மாகாணத்தில் ஆண், பெண், குழந்தை எல்லோரையும் கணக்கிலெடுத்துக் கொண்டால் தலா பத்து ரூபாய் வீதம் அந்நியச் சாமான் வாங்கப்பட்டிருக்கிறது. அதில் பிரிட்டிஷ் சாமான் 5½ ரூபா யென்றும், ஐரோப்பியச் சாமான் 3½ ரூபா யென்றும் ஆசியா கண்டச் சாமான் 1 ரூபா யென்றும் கணக்கில் கண்டறியலாம்.

1931-32ல் மதராஸ் மாகாணத்தில் இறக்குமதியான சாமான் 15½ கோடி. இது சென்ற வருடத்தைவிட 5 கோடி ரூபாய் குறைவு.

பருத்தித் துணி வகை 1 1/3 கோடி ரூபாய்க்கு வாங்கி யிருக்கிறோம். இது சென்ற வருடத்தை விட மூன்றிலொரு பங்கு குறைவு. இவ்வருடத்தில் அதில் பிரிட்டிஷ் சரக்கு மட்டும் 1 கோடி ரூபா யிருக்கும்.

நூல் 66 லக்ஷத்துக்கு இறக்குமதி செய்திருக்கிறார்கள். அதில் 56 லக்ஷம் பிரிட்டிஷ் சரக்கு.

மோட்டார் முதலிய வாகனங்கள் ½ கோடிக்கு இறக்குமதியாகி யிருக்கிறது. சென்ற வருட அளவில் இது பாதிதான். பட்டு 29 லக்ஷத்திற்கு வரவழைக்கப்பட்டது.

புகையிலை இறக்குமதி 25 லக்ஷம். சென்ற வருடத்திலோ 33 லக்ஷத்திற்கு வரவழைத்தோம். இறக்குமதியான புகையிலையில் 16 லக்ஷ ரூபாய் பொறுமான வெறும் தழை அமெரிக்காவினின்று வந்துளது.

பிரிட்டிஷ் துணி இறக்குமதியானதை விட அதிகமாக ஜாவாவினின்று 1¼ கோடி ரூபாய்க்கு சர்க்கரை இறக்குமதியாகி யிருக்கிறது.

ஐரோப்பாவினின்று போலி நெய் வகைரா 12 லக்ஷத்திற்கு வரவழைக்கப்பட்டது. சென்ற வருடத்தை விட 8 லக்ஷம் குறைவு.

பிரிட்டிஷ் நாடுகளிலிருந்து மாவு ரகங்கள் 17 லக்ஷத்திற்கு இன்னமும் இறக்குமதி செய்யப் பட்டிருக்கிறது.

சீமையில் கள்ளுப் போய்

(சக்கரவர்த்தி ராஜாஜி)

லண்டன் 'டெயிலி மெயில்' பத்திரிகை சமீபத்தில் ஓர் விஷயத்தை வெளியிட்டது. சென்னை மாகாணத்தில் மதுவிலக்குப் பிரசாரம் பரீக்ஷை செய்யப்பட்டு தோற்றுப் போய் விட்டதாகவும், தங்கள் புருஷர்களுக்கு சவுகர்யமாக ஆங்காங்கு கள்ளுக் கடைகள் இருக்க வேண்டுமென சென்னை மாகாணப் பெண் மக்கள் விரும்பியதாகவும் 'டெயில் மெயில்' கூறுகின்றது. இந்தியாவில் எந்தப் பெண்ணாவது இவ்வாறு சொல்லியிருப்பாளா? இந்த மாதிரி கேட்டிருப்பாளா? திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தைச் சுற்றி சில கள்ளுக் கடைகளைச் சாத்தியதைத் தான் 'பரீக்ஷை' யென்று குறிப்பிடப் பட்டது போலும். இந்த இடத்திலுள்ள பெண்கள் கள்ளுக் கடைகளைப் பிசாசுகளென எண்ணியிருக்கின்றனர். சர்க்கார் இந்த வருடத்தில் மூடிய கடைகளை மறுபடி திறந்து விட்டது பெண் மக்கள் மனதுக்குப் பிடிக்கவே யில்லை.

நிறையச் சாராயம் இறக்குமதி செய்கின்ற கம்பெனிக்காரர்கள் சில பத்திரிகைகளின் உதவி கொண்டு குடிப் பிரசாரம் செய்யும் வழக்கமுண்டு. அத்தகைய பிரசாரம் இந்த மாகாணத்தில் நடந்ததென்னவோ உண்டு. மேலும் பிரிட்டிஷ் பத்திரிகைகளினின்று எடுக்கப்பட்ட அடியிற் கண்ட வரிகளும் கவனிக்கத் தக்கவை.

"காந்தி கக்ஷியார் ஏழை மக்களிடம் சென்று ஸ்வராஜ்யம் வந்து விட்டதனால் வரி யில்லாது இனம் கள்ளு தயாரிக்கலா மென்றும் குடிக்கலா மென்றும் பிரசாரம் செய்கிறார்கள்" என்று பிரிட்டிஷ் பத்திரிகை சொல்கிறது.

இதைவிட பக்காப் புளுகு வேறு இருக்க முடியுமா?

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை மதுவிலக்குக்காக அநேக தீர்மானங்கள் செய்திருக்கிறது. ஆனால் சீமையிலுள்ள ஜனங்களை ஏமாற்றுவதற்கு கள் பிரசார பத்திரிகைகள் ஆரம்பித்திருக்கின்றன. பிரிட்டனிலுள்ள ஜனங்களின் மனோபாவமும், இந்திய மக்களின் மனோபாவமும் வெவ்வேறானவை. கள்ளின் மீது இந்திய மக்களுக்குள்ள வெறுப்பை பிரிட்டிஷ் ஜனங்களால் ஒருக்காலும் அறிய முடியாது.

"தன் தலையில் தானே"

அயர்லாந்து பல்லாண்டுகளாக சுதந்திரம் பெற பிரிட்டனுடன் போராடிக் கொண்டிருந்தது. அயர்லாந்தின் வட பகுதிக்கு அல்ஸ்டர் என்று பெயர். அவர்கள் புராடஸ்டண்டு கிருஸ்தவர். தென் பகுதியினர் கத்தோலிக்கர். பிரிட்டன் அல்ஸ்டரைக் கைக்குள் போட்டுக் கொண்டது. அயர்லாந்து சுதந்திரம் பெற்ருல், அதிகமா யிருக்கும் கத்தோலிக்கர், குறைவா யிருக்கும் புராடஸ்டண்டுகளை அடித்து விழுங்கி விடுவார்கள் என்ற ஒரு புரளி கிளப்பப் பட்டது. அல்ஸ்டர் வாசிகள் அதற்கு ஆட்பட்டு, வெகுநாள் அயர்லாந்து சுதந்திரத்துக்கு முட்டைக் கட்டை போட்டுக் கொண்டே வந்தார்கள். ஒரு சமயம் கத்தோலிக்கர் விருப்பத்திற்கு இணங்குவது போல, பிரிட்டன் பாவனை செய்ய வேண்டி வந்தது. புராடஸ்டண்டுகளுக்கு இது ஆத்திர மூட்டியது. கத்தோலிக்கரோ பிரிட்டனை நம்பவில்லை. இருவரும் ஒன்று சென்று பிரிட்டனுக்கு எதிராகக் கிளம்பி விட்டார்கள்.

இந்தியாவின் வட மேற்கிலுள்ள முஸ்லீம் பிரதேசங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு தனி ராஜ்யம் செய்ய வேண்டுமென்று முஸ்லீம்களைச் சிலர் தூண்டிக் கொண்டிருக்கிருர்கள். சமீபத்தில் இங்கிலாந்திலிருந்து ஒரு அறிக்கை கிளம்பி, இந்த வேலைக்கு முஸ்லீம்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறதாம். முஸ்லீம்கள் தனிப்பட்ட ஒரு சமஷ்டியாகி விட்டால், இந்தியாவின் "அல்ஸ்டர்"ாக அது மாறிவிடும் என்று பிரிட்டன் கனவு கொண்டிருக்கலாம். சில காலம், அது இந்திய சுதந்திரத்துக்கு முட்டுக் கட்டையாகவு மிருக்கக் கூடும்.

ஆனல், அயர்லாந்து சரித்திரத்தை பிரிட்டன் இதற்குள் மறந்து விட்டதுதான் ஆச்சரியம். இந்தப் பிளவு வேலைக்குப் பிரிட்டன் இன்று தூண்டுதலோ ஆதரவோ அளித்தால், ஒருநாள் அது "தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டதற்கு" வருந்த வேண்டி வராமலிராது. ஆனல், முஸ்லீம்கள் இப்பொழுது இந்த மாய வலைக்குள் விழமாட்டார்கள் என்பதே நமது திடமான நம்பிக்கை.

கலெக்டரா, தரகனு?

உலகத்திலேயே இப்பொழுது ஒவ்வொரு நாட்டுக்கும் ஏற்பட்டிருக்கும் தொல்லை, வியாபார நெருக்கடிதான். இதனுல் ஒவ்வொரு நாடும் பிழைப்பதற்கு தன் சாமானை பிற நாடுகளில் அதிகமாக விற்கவும், அயல் நாட்டுச் சாமான்கள் இறக்குமதியாவதைக் குறைக்கவும் முடிந்த முயற்சிகளை யெல்லாம் செய்து கொண்டிருக்கிறது. நமது நாட்டில் மாத்திரம் தான் அரசாங்கம் இவ்விஷயத்தில் அசைந்து கொடுப்பதுபோல், சும்மா விருக்கிறது.

இது போதாதென்று, சில விடங்களில் சில்லறைத் தேவதைகளான அதிகாரிகள் சுதேசிய இயக்க சம்பந்தமான் காரியங்களில் கூட குறுக்கிட்ட செய்திகள் சில, சில சமயம் வந்து கொண்டிருக்கின்றன. இவை யெல்லாவற்றையும் தூக்கி யடிக்கக்கூடிய செய்தி யொன்று இப்பொழுது கிடைத்திருக்கிறது.

மிதுனபுரி ஜில்லாக் கலெக்டர் 100 வியாபாரிகளைத் தமது பங்களாவுக்கு அழைத்து அந்நியச் சாமான்களை விற்பதற்கு ஓர் சங்கம் ஸ்தாபிக்க வேண்டு மென்று கூறினுராம். சங்கம் ஸ்தாபிப்பதென்று தீர்மானமும் ஆயிற்ரும். சந்தோஷமான சமயத்தில் ஒரு வரமும் கேட்க வேண்டு மென்று நினைத்தார் ஒரு வர்த்தகர். "எங்களுக்கு விதித்திருக்கும் தண்டப் போலீஸ் வரியை எடுத்து விட வேண்டும்" என்ருராம் அவ்வியாபாரி. "அதைப் பற்றி மட்டும் பேசாதே" என்று கூறி விட்டாராம் கலெக்டர்.

இந்தியாவின் பணத்தை வாங்கித் தின்று கொண்டிருக்கும் கலெக்டருக்கு, அந்நியச் சாமான் வியாபாரத்தில் என்ன இவ்வளவு அக்கரை? அந்நிய தேசத்தார் இவருக்கு ஏதாவது தரகு தருகிருர்களா என்ன? அந்நிய நாடுகளில் சாமான் விற்பனையாகாமல் தங்கிக் கிடந்தால், அவற்றை விற்பதில் இந்தியாவிலுள்ள கலெக்டருக்கு என்ன அக்கரை? அந்தப் பரோபகார காரியத்தைச் செய்வதற்காகத் தான், இவருக்கு கலெக்டர் உத்தியோகமா? அந்நியச் சாமான் விற்பதற்கு வசதி ஏற்படுத்தித் தருவதற்கா இவர் கொள்ளைச் சம்பளமாக இந்தியப் பணத்திலிருந்து கொட்டிக் கொள்கின்ருர்?

உபவாச பூர்வாங்கம்

மகாத்மாவின் உபவாச விரதத்தைக் கேட்டு அகில இந்தியாவும் கிடு கிடுத்து விட்டது. ஹரிஜனத் தலைவரான எம்.ஸி. ராஜா, மகாத்மா உபவாஸத்தை ஏற்கலாகா தெனவும் ஹரிஜனங்களின் நன்மைக்காக அவர் வாழ வேண்டுமெனவும் தந்தி அடித்திருக்கிறார். கவி ரவீந்திரர், தேவி சரோஜினி முதலிய பெரியவர்கள் ஏரவாடாவை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஏரவாடாவில் நீல நாகினி என்ற ஐரோப்பிய மாதரசி காந்தியடிகளின் பாதத்தில் விழுந்து உபவாச விரதம் ஏற்கலாகா தென்று கெஞ்சினாள். தானும் உடன் உபவாச மிருப்பேனென அவள் கூறியதைக் காந்திஜி தடுத்து விட்டார். தேவதாஸ் காந்தி, ராமதாஸ் காந்தி முதலிய பலரும் காந்திஜியைக் கண்டார்கள்.

மா மரத்தடி உஷ்ணமா யிருக்கவே தலையில் ஈரத் துணியை போட்டுக் கொண்டு அய்யன் அருகிலுள்ள ஒரு கொட்டடியில் இருந்தார். பத்திரிகை நிருபர்களிடம் காந்திஜி பேசிய போது அடியிற் கண்ட ஆவேச வசனங்கள் தொனித்தன. "யாராவது என்னோடு வாதித்து எனக்கு நிரூபிப்பார்களானால் உபவாஸத்தை நான் நிறுத்துவேன். ஆனால் மனிதப் பிரயத்தனத்தில் அது ஆகாத காரியம். மூன்று நாட்களாக எனக்கு தூக்கம் கிடையாது. ஏதோ என் மனதைத் தாக்கிக் கொண்டேயிருந்தது. இந்த விரதத்தில் இறங்குவ தென்ற முடிவு செய்த பின்னர் தான் தூக்கம் வந்தது. இந்த விரதத்தை என்னால் தாங்க முடியு மென்றே தோன்றுகிறது. ஏனெனில் ஆண்டவனின் அற்புத சக்திகள் உலகில் இந்த யுகத்திலும் பலிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

"இதைப் போன்ற அநேக உபவாசங்களை நான் இன்னும் ஏற்றாக வேண்டும். இந்தத் தடவை பிழைத்தேனானாலும் அடுத்தாற் போலும் நான் இந்த விரதத்தை ஏற்கக்கூடும். போன உபவாச விரதம் ஓர் வகைத்து. ஒரு காரியத்தைக் குறிப்பிட்டு அது ஆரம்பிக்கப் பட்டது. ஆனால் இந்த உபவாசமோ ஹிந்து தர்மத்தில் சொல்லப்பட்டது போல ஆத்ம சுத்தம் செய்து கொள்வதற்காக ஏற்றுக் கொள்ளப் பட்டதாகும். புத்தி சாதுர்யத்தினாலோ, இதர பொருள்களினாலோ ஓர் மத இயக்கத்தை நடத்த முடியாது. ஆத்ம சக்தியால்தான் அது முடியும். ஆத்ம சக்தியை வளர்க்கும் சக்தி உபவாச விரதத்திற்கு உண்டு. பத்து வருடத்துக்கு முன்னே எனது உடல் 21 நாள் உபவாசத்தைத் தாங்கவில்லையா? அதேபோல இப்போதும் எனது ஆன்மா இதைத் தாங்குமென நான் நினைக்கின்றேன். ஆண்டவனின் அருட் சக்தியும் என்னைக் காக்கும்!"

வார்டரா? தொண்டரா?

அமராவதி ஜெயிலில் வார்டர் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு ஜெயில் சட்டப்படிக்கு 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த வார்டர் ஒரு காங்கிரஸ் கைதிக்கு எழுதப்பட்ட கடிதமொன்றை வைத்துக் கொண்டிருந்தாராம். பிறகு ஜெயிலிலுள்ள அவரது அறையைச் சோதனை போட்ட போது, ஒரு காங்கிரஸ் கொடி, காங்கிரஸ் தொண்டனின் உடை, ஒரு கைதியின் கடிதம் முதலியன அகப்பட்டதாம்.

இந்த நீதிபதி வார்டரை தண்டிக்கும் போது, "காங்கிரஸ் தொண்டர்களைக் கண்காணித்துக் கொண்டிருக்க நியமிக்கப்பட்ட இந்த வார்டர் ஒரு காங்கிரஸ் தொண்டராக உள்ளூர இருந்து வந்திருக்கிறார். காங்கிரஸ் தொண்டனுக்கும், இந்த வார்டருக்கும் ஒன்று தான் வித்தியாசம். அதாவது கவர்ன்மெண்டு உதவி பெற்றுக்கொண்டு இந்த வார்டர் காங்கிரசுக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கிறான்" என்று கூறினார்.

வார்டர், மேல் கோர்ட்டில் வழக்குத் தொடுப்பாரென்று "ஸ்வராஜ்யா" பத்திரிகைக்கு ஒரு செய்தி வந்துளது.

அரை டிக்கட் பேர்வழிகள்!

"சீமைக்குப் போய்க் கொண்டும் வந்து கொண்டும் ஒரு கூட்டம் இருந்து கொண்டிருக்கிறது. கப்பலில் அவர்களுக்கு 'ரிடர்ன்' டிக்கட்டுகளாவது கிடைத்ததா, இல்லையா வென்பது தெரிய வில்லை. கிடைத்திருந்தால் அரை சார்ஜில் சீமைக்குப் போய் வந்து விடுவார்கள். குழந்தைகளைப் போல இவர்களையும் அரை டிக்கட் பேர்வழிகளாக நடத்துவது தான் சரி. இவர்கள் எடுப்பார் கைக் குழந்தைகள் தானே!" என்று ஒரு நண்பர் எழுதுகிறார்.

ஹரிஜன உதவி

ஒரு ஹரிஜன மாணவனால் எவ்வளவு படிக்க முடியுமோ அவ்வளவு வரைக்கும் ஆகும் செலவை தாம் கொடுப்பதாக திருச்சி டாக்டர் டி. எஸ். ராமச்சந்திரன் வாக்களித்திருக்கிறார். திருச்சியில் படிக்கும் ஒரு ஹைஸ்கூல் மாணவனுக்கு இந்த அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது.

திருச்சிக்கடுத்த கல்கண்டார் கோட்டையிலும் வரகனேரியிலும் ஹரிஜனங்களுக்கு இரண்டு இராப் பள்ளிக்கூடங்களும், தென்னாற்காடு ஜில்லா திருவெண்ணெய்நல்லூரில் ஒரு பகல், ஒரு இராப் பள்ளிக்கூடமும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

பொள்ளாச்சி தாலுக்காவில் ஒரு கிணறும் உடுமலைப் பேட்டையில் இரண்டு கிணறுகளும், லால்குடிக்கடுத்த ஆங்கரையில் இரண்டு கிணறுகளும் ஹரிஜனங்களின் உபயோகத்துக்கு விடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமதி மீனாக்ஷி அம்மாளின் நன்கொடையில் கூத்தூரில் ஒரு கிணறு வெட்டப்பட்டிருக்கிறது.

மன்னார்குடியில் 600 ஹரிஜனங்களுக்கு எண்ணெ, சோப்பு, சியக்காய்ப் பொடி முதலியவைகள் வழங்கப்பட்டன. ஒரு இராப் பள்ளிக்கூடமும் திறந்து வைக்கப்பட்டது. பிராம்மணத் தெருக்களின் வழியே ஒரு பெரிய ஊர்வலமும் நடைபெற்றதாம்.

மதுரைக்கடுத்த கொச்சடை எ. எம். சி. சி. பாடசாலையைச் சேர்ந்தவர்கள் ஹரிஜனங்களுக்கு புத்தகங்கள்-நோட்டுகள், பென்சில்கள் முதலியன வழங்கினார்களாம்.

பெரியகுளம் தாலூக்கா வடுகப்பட்டியிலும் ஹரிஜனக் குழந்தைகளுக்குப் போட்டிப் பந்தய மேற்படுத்தி சிலேட்டு, புஸ்தகம் பென்சல் முதலியவைகள் வழங்கினார்களாம்.

ஹரிஜன தினம்

சென்னை 'சுதந்திரச் சங்கு' ஆபீஸில் ஹரிஜன தினத்தன்று காலையில் திருவல்லிக்கேணியிலுள்ள பிரபல தெருக்களின் வழியே ஒரு பஜனை நடந்தது. மத்தியானம் நூற்றுக் கணக்கான ஹரிஜனங்களுக்கு அன்ன மிடப் பட்டது. 25 சிறுவர்களுக்கு ஆடை வழங்கப் பட்டது.

திருச்சி ஜில்லா தேவதானம், வாமடம், சிந்தாமணி, வடகூர், முதலிய ஊர்களிலுள்ள சேரிகளில் ஹரிஜனக் குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்விக்கப்பட்டது.

சட்ட மறுப்புத் தண்டனைகள்

கள்ளிக்கோட்டையில் கேரள 26-வது சர்வாதிகாரி ஸ்ரீமான் கிருஷ்ணகுட்டி நாயருக்கு 15 மாதக் கடுங்காவலும், மற்றும் 7 தொண்டர்களுக்கு தலா 9 மாதக் கடுங்காவல் தண்டனையும்.

ஒரிஸ்ஸா காங்கிரஸ் தலைவர் ஹரிகிருஷ்ண மகாதப் என்பவர் விடுதலையாகி வரும் போது மீண்டும் கட்டாக்கில் கைது செய்யப்பட்டார். பம்பாயில் கொடியேற்றத் திருவிழாவன்று 5 தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

மங்களூரில் காங்கிரஸ் தினத்தைக் கொண்டாடி கொடியேற்ற விழா நடத்திய பொழுது மூன்று பேர்கள் கைது செய்யப்பட்டனர். ஜவுளிக் கடை மறியல் செய்த 6 தொண்டர்களும் கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக்கப் பட்டனராம்.

"வெள்ளியாயினும் பரவாயில்லை"

அமெரிக்காவுக்கு வரவேண்டிய யுத்தக் கடன் தொகைகளை வெள்ளியாகக் கொடுத்தால் கூட பெற்றுக் கொள்ள வேண்டு மென்று பிரஸிடெண்டுக்கு அநுமதி யளித்து செனெட் சபை தீர்மானத்திருக்கிறதாம். முதலில் தங்கமாகக் கொண்டு போய் சேர்த்தாய் விட்டது. இப்பொழுது வெள்ளி வேண்டு மென்கிறார்கள். இனி செம்பு, பித்தளை, ஈயம் முதலியவைகள் கூட கடனுக்காகப் பெற்றுக் கொள்வார்கள் போலிருக்கிறது.

எண்ணெய்த் தகராறு தீர்ந்தது

இங்கிலாந்துக்கும், பர்ஷியாவுக்கும் ஏற்பட்ட மண் எண்ணெய்த் தகராறு தீர்ந்து விட்டதாகவும் லாபத்தில் 100-க்கு 16 வீதம் பர்ஷியாவுக்குக் கொடுத்து வந்ததற்குப் பதிலாக ஒரு டன் எண்ணெய்க்கு 4 ஷில்லிங் வீதம் கொடுப்பதென்றும், வருஷம் 50 லக்ஷம் டன் வீதம் எண்ணெய் எடுத்துக் கொள்கிற தென்றும் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

அந்தமானுக்கு மீண்டும்

கல்கத்தாவிலிருந்து மீண்டும் அந்தமானுக்கு 16 ராஜீயக் கைதிகளை அனுப்பி விட்டனராம்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.